ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்

முதலாயிரம்

# பெரியாழ்வார் திருமொழி

## இரண்டாம்பத்து

## 3-ஆம் திருமொழி - போய்ப்பாடு

*

@ போய்ப்பாடுடையநிந்தந்தையும்தழ்த்தன்
பொருதிறல்கஞ்சன்கடியன் *
காப்பாருமில்லைகடல்வண்ணா! உன்னைத்
தனியேபோய்எங்கும்திரிதி *
பேய்ப்பால்முலையுண்டபித்தனே!
கேசவநம்பீ! உன்னைக்காதுகுத்த *
ஆய்ப்பாலர்பெண்டுகளெல்லாரும்வந்தார்
அடைக்காய்திருத்திநான்வைத்தேன். (1)

வண்ணப்பவளமருங்கினில்சாந்தி
மலர்ப்பாதக்கிங்கிணியார்ப்ப *
நண்ணித்தொழுமவர்சிந்தைபிரியாத
நாராயணா! இங்கேவாராய் *
எண்ணற்கரியபிரானே! திரியை
எரியாமேகாதுக்கிடுவன் *
கண்ணுக்குநன்றுமழகுமுடைய
கனகக்கடிப்பும்இவையா! (2)

வையமெல்லாம்பெறும்வார்கடல்வாழும்
மகரக்குழைகொண்டுவைத்தேன் *
வெய்யவேகாதில்திரியையிடுவன்
நீவேண்டியதெல்லாம்தருவன் *
உய்யஇவ்வாயர்குலத்தினில்தோன்றிய
ஒண்கடராயர்கொழுந்தே! *
மையன்மைசெய்துஇளவய்ச்சியருள்ளத்து
மாதவனே! இங்கேவாராய். (3)

வணநன்றுடையவயிரக்கடிப்பிட்டு
வார்காதுதாழப்பெருக்கி *
குணநன்றுடையர்இக்கோபாலபிள்ளைகள்
கோவிந்தா! நீசொல்லுக்கொள்ளாய் *
இணைநன்றழகியஇக்கடிப்புஇட்டால்
இனியபலாப்பழம்தந்து *
கணநன்றணிமுலையுண்ணத்தருவன்நான்

சோத்தம்பிரான்! இங்கேவாராய். (4)

சோத்தம்பிரான்! என்றுஇரந்தாலும்கொள்ளாய்
கரிகுழலாரொடுநீபோய் *
கோத்துக்குரவைபிணைந்துஇங்குவந்தால்
குணங்கொண்டிடுவனோ? நம்பீ *
பெர்த்தும்பெரியனஅப்பம்தருவன்
பிரானே! திரியிடவொட்டில் *
வேய்த்தடந்தோளார்விரும்புகருங்குழல்
விட்டுவே! நீஇங்கேவாராய். (5)

விண்ணெல்லாம்கேட்கஅழுதிட்டாய்!
உன்வாயில்விரும்பியதனைநான்நோக்கி *
மண்ணெல்லாம்கண்டுஎன்மனத்துள்ளேயஞ்சி
மதுசூதனேயென்றிருந்தேன் *
புண்ணேதுமில்லைஉன்காதுமறியும்
பொறுத்துஇறைப்போதுஇருநம்பீ! *
கண்ணா! என்கார்முகிலே!
கடல்வண்ணா! காவலனே! முலையுணாயே. (6)

முலையேதும்வேண்டேனென்றோடி
நின்காதில்கடிப்பைப்பறித்தெறிந்திட்டு *
மலையையெடுத்துமகிழ்ந்துகல்மாரிகாத்துப்
பசுநிரைமேய்த்தாய்! *
சிலையொன்றுஇறுத்தாய்! திரிவிக்கிரமா!
திருவாயர்பாடிப்பிரானே! *
தலைநிலாப்போதேஉன்காதைப்பெருக்காதே
விட்டிட்டேன்குற்றமேயன்றே. (7)

என்குற்றமேயென்றுசொல்லவும்வேண்டாகாண்
என்னைநான்மண்ணுண்டேனாக *
அன்புற்றுநோக்கிஅடித்தும்பிடித்தும்
அனைவர்க்கும்காட்டிற்றிலையே *
வன்புற்றரவின்பகைக்கொடி வாமனநம்பீ!
உன்காதுகள்தூரும் *
துன்புற்றன்வெல்லாம்தீர்ப்பாய்பிரானே!
திரியிட்டுச்சொல்லுகேன்மெய்யே. (8)

மெய்யென்றுசொல்லுவார்சொல்லைக்கருதித்
தொடுப்புண்டாய்வெண்ணெயையென்று *
கையைப்பிடித்துக்கரையுரலோடுஎன்னைக்
காணவேகட்டிற்றிலையே? *
செய்தனசொல்லிச்சிரித்துஅங்குஇருக்கில்
சிரீதரா! உன்காதுதூரும் *
கையில்திரியையிடுகிடாய்
இந்நின்றகரிகையார்சிரியாமே. (9)

காரிகையார்க்கும்உனக்கும்இழுக்குற்றென்?
காதுகள்வீங்கியெரியில் *
தாரியாதாகில்தலைநொந்திடுமென்று
விட்டிட்டேன்குற்றமேயன்றே *

சேரியில்பிள்ளைகளெல்லாரும் காது
பெருக்கித்திரியவும் ! காண்டி *
ஏர்விடைசெற்றுஇளங்கன்றுஎறிந்திட்ட
இருடீகேசா! எந்தன்கண்ணே. (10)

கண்ணைக்குளிரக்கலந்துஎங்கும்நோக்கிக்
கடிகமழ்பூங்குழலார்கள் *
எண்ணத்துள்என்றும்இருந்துதித்திக்கும்
பெருமானே! எங்களமுதே! *
உண்ணக்கனிகள்தருவன் கடிப்பொன்றும்
நோவாமேகாதுக்கிடுவன் *
பண்ணைக்கிழியச்சகடமுதைத்திட்ட
பற்பநாபா! இங்கேவாராய். (11)

வாவென்றுசொல்லிஎன்கையைப்பிடித்து
வலியவேகாதில்கடிப்பை *
நோவத்திரிக்கில்உனக்கிங்கிழுக்குற்றென்?
காதுகள்நொந்திடும்கில்லேன் *
நாவற்பழம்கொண்டுவைத்தேன்
இவை # யாணாய்நம்பீ! * முன்வஞ்சமகளைச்
சாவப்பாலுண்டுசகடிறப்பாய்ந்திட்ட
தாமோதரா! இங்கேவாராய். (12)

* வார்காதுதாழப்பெருக்கியமைத்து
மகரக்குழையிடவேண்டி *
சீரால்அசோதிதிருமாலைச்சொன்னசொல்
சிந்தையுள்நின்றுதிகழ *
பாரார்தொல்புகழான்புதுவைமன்னன்
பன்னிருநாமத்தால்சொன்ன *
ஆராதஅந்தாதிபன்னிரண்டும்வல்லார்
அச்சுதனுக்குஅடியாரே. (13)

அடிவரவு : போய் வண்ணம் வையம் வணம் சோத்தம் விண் முலை என் மெய் காரிகை கண்ணை வா வார்காது வெண்ணெய்.

! காண்டி-காணாநின்றாய் # ஆணாய்-பாராய்